**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., L.L.M.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 நாள் வியாழக்கிழமை

**IA.No.06/2025 in OS.No.126/2019**

**(TNTM03000324/2019)**

1. சுகுணா
2. ராணி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. பாலகிருஷ்ணன்
2. லஷ்மி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 09.04.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ஞானசேகரன்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சரவணன், B.Com.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

தாவா வழக்குரையில் மனுவில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்ய அனுமதி வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்/வாதி தாக்கல் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவில் 1ம் மனுதாரர், அசல் வழக்கில் 1ம் வாதி. 2ம் வாதி 1ம் வாதியின் சகோதரி. 1ம் மனுதாரர் தன் சகோதரியின் சார்பாக இந்த பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார். பாகப்பிரிவினை பரிகாரம் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக மேற்கண்ட வழக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு நிலுவையில் இருக்கும்போது, கண்ணமங்கலம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அ பதிவேடு அடிப்படையில், வழக்கில் உள்ள "C" மற்றும் "D" அட்டவணை சொத்துக்கள் சர்வே எண்களையும் அளவுகளையும் தவறுதலாக திருத்தியிருந்தார்கள். தற்போது பட்டா மற்றும் சிட்டாவினை ஆன்லைன் மூலம் சரி பார்த்தபோது திருத்தம் செய்வதற்கு முன்பு ஏற்கனவே இருந்த சர்வே எண் சரியானது என்று மனுதாரருக்கு தெரியவந்தது.

எனவே அசல் வழக்கு தாக்கல் செய்தபோது இருந்த சர்வே எண்களை மீண்டும் கொண்டுவர வழக்குரையில் திருத்தம் செய்வதற்கு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். C' அட்டவணை சொத்தின் சரியான சர்வே எண்.621/57 என்றும், அதன் பரப்பளவு 53 சதுர மீட்டர் என்றும், 'D' அட்டவணை சொத்தின் சரியான சர்வே எண்.621/54 என்றும், அதன் பரப்பளவு 42 சதுர மீட்டர் என்பது சரியானது ஆகும். எனவே அசல் வழக்குரையில் முதன் முதலில் குறிப்பிட்டிருந்த சர்வே எண் மற்றும் அளவுகளை மீண்டும் கொண்டு வருவதற்கு வழக்குரையை திருத்தம் செய்வது அவசியமாகும். மாண்புமிகு நீதிமன்றம் இந்த மனுவை அனுமதிக்காவிட்டால், மனுதாரர்கள் பெரும் சிரமத்தையும் ஈடுசெய்ய முடியாத இழப்பையும் சந்திப்பார்கள். எனவே, மனுவில் விவரிக்கப்பட்டுள்ள திருத்தல் விவரங்களை வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதிக்கவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2**. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்து 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்:—**

மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் வழக்கின் "C" மற்றும் "D" அட்டவணை சொத்துக்களின் சர்வே எண்களையும், விஸ்தீரணங்களையும் மாற்றக்கோரி தாக்கம் செய்துள்ள மனுவானது சட்டப்படியும். நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். இவ்வெதிர்மனுதாரர் இந்த எதிருரையில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்படுகிறது. மேற்படி மனுதாரர்கள் வழக்கின் "A" அட்டவணை சொத்தை மூன்று சமபாகங்களாக பிரித்து அதில் இரண்டு பாகங்களை ஒதுக்கக்கோரியும். வழக்கின்"B" , "C" மற்றும் "D" அட்டவணை சொத்துக்களை நான்கு சமபாகங்களாக பிரித்து அதில் இரண்டு பாகங்களை ஒதுக்கக்கோரியும் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை இந்த எதிருரையின் ஒரு அங்கமாக பாவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்படி வழக்கின் மனுதாரர்கள் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் சகோதரிகளும், 1ம் எதிர்மனுதாரர் சகோதரரும் ஆவார்கள். மேற்படி வழக்கின் "A" அட்டவணை சொத்துக்களில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு உரிய இரண்டு பாகங்களை பிரித்துக்கொடுக்க இவ்வெதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

3. மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்கு சொத்தான "C" அட்டவணை சொத்தின் உடைய புதிய சர்வே எண்.621/57 பூரா 53 சதுரமீட்டர் எனவும், "D" அட்டவணை சொத்தின் உடைய புதிய சர்வே எண்.621/54 பூரா 42 சதுரமீட்டர் என குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளார்கள். மேற்படி வழக்கானது விசாரணைக்காக நிலுவையில் இருக்கும்போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் I.A.No.95/2020 என்ற திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி

மனுவில் கூறியிருப்பது என்னவென்றால் வழக்கு தாக்கல் செய்யும்போது "C" அட்டவணை சொத்தின் சர்வே எண்.621/57 பூரா 53 சதுரமீட்டர் "D" அட்டவணை சொத்தின் சர்வே எண்.621/54 பூரா 42 சதுரமீட்டர் என தவறுதலாக போடப்பட்டதாகவும், தற்போது கண்ணமங்கலம் கிராம நிர்வாக அலுவலரின் உதவியுடன் சரியான சர்வே எண் கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அவற்றின் சரியான சர்வே எண் என்னவென்றால் "C" அட்டவணை சொத்தின் உடைய சர்வே எண்.621/47 பூரா 24 சதுரமீட்டர் எனவும், "D" அட்டவணை சொத்தின் உடைய சர்வே எண்.621/48 பூரா 22 சதுரமீட்டர் எனவும் கூறப்பட்டு, அதன்படி சர்வே எண்களையும், விஸ்தீரணம் மற்றும் மதிப்பீடுகளையும் திருத்தம் செய்ய வேண்டி மாண்பமை நீதிமன்றத்தில் I.A.No.95/2020 என்ற திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டு, அது 29.08.2022 அன்று அனுமதிக்கப்பட்டு, அவற்றின் மீது APC தாக்கல் செய்யப்பட்டது.

4. அதன்பிறகு மேற்படி அசல் வழக்கானது 06.06.2023 அன்று கட்டாய விசாரணைக்காக Listல் போடப்பட்டது. மேற்படி வாய்தா தேதியன்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் Adjournment Petition தாக்கல் செய்யப்பட்டு, இறுதியாக 13.06.2023 அன்று வாய்தா போடப்பட்டது. மேற்படி 13.06.2023 அன்று மீண்டும் Adjournment Petition தாக்கல் செய்யப்பட்டு, இறுதியாக 23.06.2023 அன்று வாய்தா போடப்பட்டது. அன்றைய தினமும் மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும், விசாரணை தொடங்காத்தாலும் மேற்படி வழக்கானது Dismissed for Default செய்யப்பட்டது. அதன்பிறகு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கட்டளை 9 விதி 9 மற்றும் பிரிவு 5ன் காலதாமத மனுவும் தாக்கல் செய்யப்பட்டு, அது முறையே என I.A.No,2/2023, IA.No, 3/2024 என நெம்பராகி அனுமதிக்கப்பட்டது. அதன்பிறகு மேற்படி அசல் வழக்கானது விசாரணைக்கு எடுத்து கொள்ள உள்ள நேரத்தில் மேற்படி I.A.No.6/2025 மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி I.A.No.6/2025 மனுவில் "C" அட்டவணை சொத்தின் உடைய சர்வே எண் 621/47 பூரா 24 சதுரமீட்டர் என்று உள்ளதை, மீண்டும் சர்வே எண்.621/57 பூரா 53 சதுரமீட்டர் என்றும், "D" அட்டவணை சொத்தின் உடைய சர்வே எண்.621/48 பூரா 22 சதுரமீட்டர் என்று உள்ளதை. மீண்டும் சர்வே எண்.621/54 பூரா 42 சதுரமீட்டர் என்றும் திருத்தம் செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5. மேலும், மேற்படி வழக்கில் I.A.No.95/2020 என்ற திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டு விஸ்தீரணம் குறைவாக உள்ளதால் சொத்தின் உடைய மதிப்பீடு குறைக்கப்பட்டுள்ளது. தற்போது சொத்தின் உடைய விஸ்தீரணம் அதிகப்படுத்தி திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், "C" மற்றும் "D" அட்டவணை சொத்துக்களின் உடைய மதிப்பீடு அதிகமாகும். ஆனால், Details of Amendment–ல்

அதைப்பற்றி மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கூறவில்லை. கனம் நீதிமன்றத்தில் அவற்றை தெளிவுபடுத்த வேண்டியது மனுதாரர்கள்/வாதிகளின் கடமையாகும். ஆதலால், மேற்படி மனுவானது நிலைக்கத்தக்கதல்ல, நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். உண்மையில் மேற்படி வழக்கை தாக்கல் செய்யும் மனுதாரர்கள்/வாதிகள் ஆவணங்களையும், வருவாய் பதிவேடுகளையும் சரியான முறையில் சரிபார்த்து வழக்குரையை தயார் செய்து தாக்கல் செய்ய வேண்டியது அவரது கடமையாகும். ஆனால், மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மிகவும் அலட்சியமாக இருந்துக்கொண்டு மேற்படி வழக்குரையை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

6. மேலும், எப்பொழுதே விசாரணைக்கு வரவேண்டிய அசல் வழக்கை அவற்றை நடத்தவிடாமல் வேண்டுமென்றே திருத்தல் மனு தாக்கல் செய்து, அதன்பிறகு தள்ளுபடி செய்யப்பட்டு, அவற்றை எடுத்து நடத்த மீண்டும் மனு தாக்கல் செய்யப்பட்டு, தற்போது விசாரணைக்கு வரஉள்ள நேரத்தில் மேற்படி மனுவையும் தாக்கல் செய்து நீதிமன்ற நேரத்தை வீணடிக்கப்பட்டுள்ளது. எனவே, சரியான திருத்தல் விவரம் இல்லாமலும், சரியான காரணம் ஏதுமின்றியும் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது. எனவே, மனுதாரர்கள் அசல் வழக்கை திருத்தம் செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே, மேற்படி மனுவை இவ்வெதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது. கவனக்குறைவால் இவ்வெதிருரையில் சொல்லப்படவேண்டிய சங்கதிகள் ஏதேனும் விடுப்பட்டிருந்தால் கூடுதல் எதிருரை தாக்கல் செய்ய இவ்வெதிர்மனுதாரர் உரிமை கோருகிறார்.

7. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

8. <u>பிரச்சனைக்கான தீர்வு:-</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி செய்ய தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் பத்தி 3 மற்றும் பத்தி 4 ஆகியவற்றில் குறிப்பிட்டிருந்த சர்வே எண். விவரங்கள் கண்ணமங்கலம், கிராம நிர்வாக அலுவலர் கைப்பட எழுதி வழங்கிய "A" பதிவேடு அடிப்படையில், வழக்குரையை திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்து தவறுதலாக திருத்தம் செய்யப்பட்டுவிட்டது. தற்போது பட்டா எண்.859 மற்றும் பட்டா எண்.1291 ஆகியவற்றில் அடிப்படையில் சரி பார்த்தபோது வழக்குரை திருத்தம் செய்வதற்கு முன்பு இருந்த சர்வே எண் மற்றும் அளவுகள் சரியானது என்பது தெரியவந்தது.

எனவே திருத்தம் செய்யப்பட்ட விவரங்களை நீக்கம் செய்துவிட்டு திருத்தம் செய்வதற்கு முன்பு இருந்த அதே விவரங்களை மீண்டும் கொண்டுவர வேண்டி வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் சகோதரர், சகோதரிகள் ஆவார்கள். "A" அட்டவணை சொத்துக்களில் வாதிகளுக்கு உரிய 2 பாகங்கள் பிரித்து கொடுக்க இந்த எதிர்மனுதாரருக்கு ஆட்சேபணை இல்லை. அசல் வழக்கு தாக்கல் செய்தபோது "C" அட்டவணை சொத்தில் புதிய சர்வே எண்.621/57 அளவு 53 சதுர மீட்டர் என்றும், "D" அட்டவணை சொத்தில் புதிய சர்வே எண்.621/57 அளவு 53 சதுர மீட்டர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவற்றை திருத்தம் செய்யவேண்டும் என்று மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.95/2020 தாக்கல் செய்து அதன் அடிப்படையில், "C" அட்டவணை சொத்தில் புதிய சர்வே எண்.621/47 அளவு 24 சதுர மீட்டர் என்றும், "D" அட்டவணை சொத்தில் புதிய சர்வே எண்.621/48 அளவு 22 சதுர மீட்டர் என்றும் திருத்தம் செய்யப்பட்டது. தற்போது மீண்டும் திருத்தம் செய்யப்பட்ட விவரத்தை நீக்கிவிட்டு ஏற்கனவே குறிப்பிட்டிருந்த அதே அளவு விவரங்களை சேர்க்க திருத்தம் செய்ய அனுமதிவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அளவுகள் அதிகப்படுவதால், சொத்து மதிப்பீடு அதிகமாகும். அந்த விவரங்களை குறித்து இம்மனுவில் எதுவும் குறிப்பிடவில்லை. வழக்கு தாக்கல் செய்யும்போதே சரியான ஆவணங்கள் அடிப்படையில், சொத்து விவரங்கள் குறிப்பிடாமல் அலட்சியமாக இருந்துள்ளார்கள் என்பது தெரியவருகிறது. விசாரணைக்கு வழக்கு வரும்போது எல்லாம் வேண்டுமென்றே வழக்கை நடத்தாமல் தள்ளுபடிக்கு விடுவதும் அல்லது வழக்குரை திருத்த மனு தாக்கல் செய்தும், வழக்கை காலம் கடத்திக்கொண்டிருக்கிறார்கள். சரியான காரணம் கூறாமல் சரியான திருத்தல் விவரம் இல்லாமல் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

10. வழக்கு சொத்து குறித்து தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை முழுமையாக தீர்வு காண்பதற்கு இருதரப்பு விசாரணை அவசியமாகும். அசல் வழக்கில் குறிப்பிட்டுள்ள "C" அட்டவணை சொத்தின் பழைய சர்வே எண்.222/20, புதிய சர்வே எண்.621/57 என்பது சரியான சர்வே எண் என்பதற்கான பட்டா எண்.1291 ஆவணமாகவும், "D" அட்டவணை சொத்தின் பழைய சர்வே எண்.222/20, புதிய சர்வே எண்.621/54 என்பது சரியான சர்வே எண் என்பதற்கான பட்டா எண்.859ஆவணமாகவும், மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.5/2025 இடை மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே அசல் வழக்கை திருத்தம் செய்யவேண்டியது

அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அசல் வழக்குரையை திருத்தம் செய்தால்தான் அசல் வழக்கை மேல் நடத்தி தீர்வு காணமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதால் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.04.30 17:48:58 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:–</u> இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.04.30 17:49:08 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.